# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 20.12.2018 | 1) தூத்துக்குடி மாநகராட்சியின் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) பராமரிப்பு செய்யவும் மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் குழல் விளக்குகளை மட்டும் LED தெரு விளக்குகளாக மாற்றம் செய்து 10 ஆண்டுகள் பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள அரசாணை (Ms) எண் 6 நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கு துறை நாள் 17.01.2012 ல் 2011–2012ஆம் ஆண்டு நிதியாக ரூ. 93.00 இலட்சம் மற்றும் அரசாணை (D) எண் 225 நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கு துறை நாள் 05.09.2012ல் 2012–2013ஆம் ஆண்டு நிதியாக ரூ. 700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் அரசாணை எண். 88 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை நாள் 24.09.2012ல் மற்றும் அரசாணை எண். 409 (நிதி) ஊதியம் துறை நாள் 26.11.2012ல் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டப்பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு விதிமுறைகளின்படியும் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் 2013ல் கோரப்பட்டு ESCO _1 ன் படி பணிகளை செயல்படுத்தாத நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டதின் பேரில் மறு ஒப்பந்தப்புள்ளிகள் 22.07,2016ல் கோரப்பட்டது. பின்னர் மறு ஒப்பந்தப்புள்ளியும் 19.11.2016ல் ரத்து செய்யப்பட்டது.<br>இதனைத் தொடர்ந்து தமிழக அரசின் சிறப்பு திட்ட அறிவிப்பின் கீழ் அனைத்து வகையான தெருவிளக்குகளையும் LED விளக்குகளாக உள்ளாட்சிகளில் கொண்டு வர அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் கடந்த 07.09.2017ம் தேதியன்று நடத்தப்பட்ட ESCO ஆய்வுக் கூட்டத்தில், தூத்துக்குடி மாநகராட்சியில் ESCO மின் ஆற்றல் சேமிப்பு பெற்றிட வாய்ப்புள்ளது குறித்து தொழில் நுட்பரீதியாக அறியப்பட்டது. பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு ESCO -1 ன் படி அனைத்து வகை தெருவிளக்குகளையும் ஒட்டு மொத்தமாக LED விளக்குகளாக மாற்றம் செய்திட ஏற்கனவே IUDM திட்டத்திலிருந்து வழங்கப்பட்ட நிதியினை (As Per Revised Administrative approval G.O. (Ms) No. 90 MAWS (MA2) Dept | 220)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. |

Dated 26.06.2015) பயன்படுத்திக்கொள்ளவும், கூடுதலாக ஏற்படும் செலவுத்தொகை தேவைப்படின் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஏதுவாக மாமன்றத்திற்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற்று திருத்திய நிர்வாக அனுமதிக்கான அரசாணை பெற்றிடும் பொருட்டு பிரேரணை அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் தற்போதுள்ள தெருவிளக்குகள் எண்ணிக்கையின்படி ஏற்கனவே உள்ள அனைத்து தெருவிளக்கு வகைகளையும் மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED விளக்குகளாக மாற்றி அமைக்கவும் மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்கள் பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டு தற்போதுள்ள தெருவிளக்குகள் விபரப்படி மொத்தமுள்ள 14,674 எண்ணிக்கை அனைத்து வகை விளக்குகளையும் மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED விளக்குகளாக மாற்றம் செய்யவும் அதற்கு தேவையான மின் சக்தி சேமிப்பு உபகரணங்களை நிறுவவும் மதிப்பீடு தொகை ரூ 1650.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மாமன்றம் தீர்மான எண். 92 நாள் 16.10.2017ல் ஒப்புதல் வழங்கியது.

மேலும் இதற்கான நிதி ஆதார வகைப்பாடும் ஏற்கனவே கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டது விபரம் வருமாறு.

| Funding Pattern Previously sectioned (Rs. in Lakh) | | | | | Funds Received so far (Rs. in Lakh) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Project Cost before GO No. 90 dt. 26.06.2015 | IUDM Share | | ULB | Total | IUDM | | | Expenditure incurred as on date for conducting IGA & initial work | IUDM Share Fund yet to be Received |
| | 2011-12 | 2012-13 | | | 2011-12 | 2012-13 | Total | | |
| | | | | | | | | | |
| 1415.00 | 93.00 | 700.00 | 622.00 | 1415.00 | 93.00 | 350.00 | 443.00 | 34.71 | 350.00 |

இதன் பின்னர் திருத்திய திட்ட மதிப்பீடு 26.06.2015ல் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டது.

| Revised Funding Pattern (Rs. in Lakh) | | | | Funds already Received (Rs. in Lakh) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Revised Project Cost as per GO No. 90 dt. 26.06.2015 | IUDM Share | ULB Share | Total | IUDM | | | Expenditure incurred as on date for conducting IGA & initial work | IUDM Share Fund yet to be Received |
| | | | | 2011-12 | 2012-13 | Total | | |
| 1341.00 | 670.50 | 670.50 | 1341.00 | 93.00 | 350.00 | 443.00 | 39.20 | |
| Revised Project Cost after revised G.O. No. 90 dt. 26.06.2015 for ESCO | | | | | | | | |
| 1650.00 | 670.50 | 979.50 | 1650.00 | 93.00 | 350.00 | 443.00 | 39.20 | 403.80 |

| | | | |
|---|---|---|---|
| | மேலே கண்டுள்ள நிதி ஆதாரத்தின்படியும் 07,09,2017ம் தேதிய ஆய்வுக்கூட்டம் நடவடிக்கைகளின்படியும் திருத்திய மொத்த திட்ட மதிப்பீடு ரூ 1650.00/– லட்சத்தில் IUDM நிதியில் மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ 670.50 லட்சம் போக மீதத் தொகை ரூ 979.50/– லட்சத்தை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து இத்திட்டத்தை செயல்படுத்திய பின்னர் கிடைக்கும் மின் சேமிப்பு தொகையினையும் சேர்த்து 4 ஆண்டுகளுக்கு செலவு செய்திட ஏதுவாகவும் திருத்திய மதிப்பீட்டின்படி அனைத்து விதமான தெருவிளக்குகளையும் (உயர் மின் கோபுரவிளக்கு நீங்கலாக) LED விளக்குகளாக மாற்றி அமைத்திடும் பணிகளை மேற்கொள்ள உரிய பிரேரணைகள் தயார் செய்து அரசிடமிருந்து திருத்திய நிர்வாக அனுமதியினை பெறவும், பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br>இதன் பின்னர் அரசு முதன்மை செயலர், சென்னை அவர்களின் தலைமையில் 27.03.2018ம் தேதியன்று நடைபெற்று ஆய்வு கூட்டத்தில் மேற்படி பிரேரணைகள் சம்பந்தமாக Power Point Presentation சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் தற்போது வரை எந்த ஒரு மேல் நடவடிக்கை இல்லாமல் மேலும் சூழல் விளக்குகள் LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் ஆற்றல் சேமிப்பு சாதனங்களை பொருத்தும் பணியும் தொடர்ந்து செய்யப்படாமல் இருந்து வருகிறது.<br>மேலும் மேற்படி ESCO -II சம்பந்தமான எந்த ஒரு உத்திரவுகளும் அரசிடமிருந்து கிடைக்கப்பெறாத நிலையில் 16.07.2018ம் தேதியில் நகராட்சி நிர்வாக ஆணையருடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் இப்பொருள் தொடர்பாக விவாதிக்கப்பட்டதில், தூத்துக்குடி மாநகராட்சியில் ESCO -1 பணிகள் ஏதும் நடைபெறாமல் நிலுவையில் இருந்து வருவதாலும், அரசிடமிருந்து எந்த ஒரு உத்திரவும் இதுநாள் வரையிலும் கிடைக்கப்பெறாததாலும், தூத்துக்குடி மாநகர பொது மக்களின் நலன் கருதி IUDM திட்ட நிதியில் 40W குழல் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் ஆற்றல் சேமிப்பு சாதனங்களை பொருத்த, அரசாணைகளின் மூலம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிக்கு பதிலாக தற்போதுள்ள குழல் விளக்குகள், சிஎப்.எல் விளக்குகள் மற்றும் T5 விளக்குகள் மொத்த எண்ணிக்கை 13,204 ஐ தெரு சாலைகளின் அகலத்தின் அடிப்படையில் 20W, 40 W, 90W மற்றும் 120W மின் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED விளக்குகளாக SMART CITY MISSION வழியாக Capex Model அடிப்படையில் மாற்றி அமைத்து, மின் ஆற்றல் சேமிப்பு உபகரணங்களை SMART COMONENT ஆக சேர்த்து பொருத்தும் போது மாநகராட்சிக்கு மின் கட்டண சேமிப்பு 45% முதல் 50 % அளவில் பொருளாதாரம் மேம்படவும் மற்றும் தெருவிளக்குகள் மூலம் உண்மையான சேமிப்பு ஆதாரக் கூறுகள் உடனடியாக கிடைக்க வாய்ப்புகள் ஏற்படும் சூழல் உள்ளது. | |

| | | |
|---|---|---|
| | எனவே மேற்சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அரசாணை (Ms) எண் 6 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை நாள் 17.01.2012 ல் 2011–2012 ஆம் ஆண்டு நிதியாக ரூ. 93.00 இலட்சம் மற்றும் திருத்திய அரசாணை (Ms) எண் 90 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை நாள் 05.09.2012 ல் 2012–2013ஆம் ஆண்டு நிதியாக ரூ 67.50 லட்சம் திட்ட நிதியில் 40W குழல் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் ஆற்றல் சேமிப்பு சாதனங்களை பொருத்தும் தெருவிளக்கு ESCO -1 பணிக்கு அனுமதி வழங்கப்பட்டதை ரத்து செய்யவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அரசிற்கு உரிய பரிந்துரைகளை செய்திட கோரவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) தூத்துக்குடி மாநகர பொது மக்களின் நலன் கருதி IUDM திட்ட நிதியில் 40W குழல் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்து மின் ஆற்றல் சேமிப்பு சாதனங்களை பொருத்த ESCO -1 பணிக்கு அரசாணைகளின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியினை ரத்து செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அரசிற்கு உரிய பரிந்துரைகளை செய்திட கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) இப்பணியில் முதல் கட்ட பணிக்கு IUDM திட்ட நிதியிலிருந்து தொகை ரூ. 39.20 லட்சம் செலவிடப்பட்டதற்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.இ3/6748–(1)/2012 | |
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – ஸ்மார் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி முத்துநகர் கடற்கரை பகுதியில் கூடுதலாக 3 மீட்டர் high mast விளக்குகள் அமைக்கும் பணிக்காக ரூ 45,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 16.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்ட மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளி உறை 30.11.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1) M/S Kumaran Industries<br>மதிப்பீட்டை விட 4.81 % அதிகம் (ரூ.44,91,750.00)<br>2) M/S Sri Ram Electricals<br>மதிப்பீட்டை விட 9.49 % அதிகம் (ரூ.46,92,732.00)<br>3)M/S R.V. Electricals<br>மதிப்பீட்டை விட 9.78 % குறைவு (ரூ.38,66,688.00)<br>வரப்பட்ட மூன்று நிறுவனங்களில் குறைவான தொகை கொடுத்துள்ள M/S R.V. Electricals நிறுவனத்தார்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>E1/03209/2015 (MN/High mast) | 221)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் ஸ்மார்ட் சிட்டி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் 4 எண்ணம் மொபைல் டாய்லெட் அமைக்கும் பணிக்காக ரூ. 2400000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 28.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியான நிறுவனத்தின் விலைப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல்.<br><br>1. M/S A.S.R. Body Works<br>மதிப்பீட்டை விட 0.50 % அதிகம் (ரூ. 23,85,600.00)<br>மேற்படி பணிக்கு தகுதியான M/S A.S.R. Body Works நிறுவனத்தின் (மதிப்பீட்டை விட 0.50% அதிகம் (ரூ. 23,85,600.00) ஒப்பந்தப்புள்ளியுடன் விலை குறைப்பு கோரப்பட்டது.<br><br>2) M/S A.S.R. Body Works<br>மதிப்பீட்டை விட 0.17 % குறைவு (ரூ. 23,69,600.00)<br>மேற்படி நிறுவனத்தின் விலைகுறைப்பு தொகை மதிப்பீட்டு தொகையினைவிட (மதிப்பீட்டை விட 0.17% குறைவு (ரூ. 23,69,600.00) குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள M/S A.S.R. Body Works என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2)மதிப்பீட்டை விட 0.17 % குறைவாக கொடுத்த M/S A.S.R. Body Works ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209.2015 (MT)(6) | 222) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 4) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளுக்குத் தேவையான கிருமிநாசினி ப்ளீச்சிங் பவுடரினை "The Thoothukudi District Cleaning product producers service industrial Co-operative Society Limited" நிறுவனத்தின் மூலம் 1 கிலோ ரூ. 38/– + 18 % GST வீதம் 32 டன்னும் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து ஏற்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்2/3722/17 | 223) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 20.12.2018